# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி:044-2951 5590

**ஆணை நாள் – 16.04.2025**

**முன்னிலை**

**முனைவர் மா. செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண்.SA.13740/F/2024

திரு R. ராஜா .. மனுதாரர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர் / கணக்கு அலுவலர்,
கருவூலக் கணக்கு இயக்குநரகம்,
நந்தனம், சென்னை - 600 035. .. பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 20.09.2023 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 18.11.2023 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 13.11.2023 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 17.10.2024 |

*******

**ஆணை**

இவ்வழக்கு இன்று (16.04.2025) இவ்வாணையத்தில் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு R. ராஜா என்பவர் காணொளி காட்சி வாயிலாக ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு G.S. சதீஷ்குமார், கணக்கு அலுவலர், கருவூலக் கணக்கு இயக்குநரகம், நந்தனம், சென்னை என்பவர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், சென்னை, கருவூல கணக்கு ஆணையரக அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், கீழ்க்கண்ட விவரங்களை மொத்தம் 2 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

1. My Retirement file No.3373/A3/2022 all pages Xerox copies.
2. Relevant Note file of the above said file No.3373/A3/2022 all pages Xerox copies.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை எனபதால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனுவிற்கும் தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (16.04.2025) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், தனது பணிநிறைவு தொடர்பான கோப்பு எண். 3373/A3/2022-ன் நகல்களை தகவல்களாக வழங்கக் கோரியதாகவும், நாளதுவரையிலும் தனக்கு அக்கோப்பின் நகல்களை தனக்கு வழங்கவில்லை என்றும், அவற்றை தனக்கு பெற்று வழங்குமாறும் ஆணையத்தை கோரினார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரின் மனுவில் கோரியுள்ள பணிநிறைவு தொடர்பான கோப்பு எண்.3373/A3/2022-ன் நகல்களை வழங்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்.

6. இன்றைய விசாரணையின் முடிவில், பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு தகவல்கள் வழங்கத் தயாராக இருப்பதை இவ்வாணையம் பதிவு செய்து, மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

7. மேலும், இனிவரும் காலங்களில் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழான மனுக்களுக்கு காலதாமதமின்றி தகவல்களை உடனடியாக வழங்கவேண்டுமென்று பொதுத்தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் அறிவுறுத்துகிறது.

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA.13740/F/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத்தகவல் அலுவலர் / கணக்கு அலுவலர்,
கருவூலக் கணக்கு இயக்குநரகம்,
நந்தனம், சென்னை - 600 035.

**<u>வழக்கு எண்.SA.13740/F/2024</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு R. ராஜா,
எண்.2/307, இரண்டாவது தெரு கிழக்கு,
வலம்புரி நகர், மயிலாடுதுறை - 609 001.

Copy to: File
SNPS / 23.04.2025